**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>**

**OS.No: 52/2022** **நாள் 09.02.2026.**

**வாசா.3, திரு.கடற்கரை**

**வா.சா.3 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

என் தொழில் நைட்டி தைப்பதும் , விவசாய வேலையான கதிர் அறுப்பதுமான வேலை செய்து வருகிறேன். புரோ நோட்டை என்ன எழுதக்கூப்பிட்டது யார் என்று கேட்டால் கனகராஜ். அவர் எனக்கு பக்கத்து ஊர் என்பதால் அவர் எனக்கு 8 வருடமாக தெரியும். கனகராஜ் நல்லமங்கலம் ஊரை சேர்ந்தவர் அவர் சென்னையில் செல்போன் கடையை வைத்திருந்தார். வாதி செல்லத்துரை எனக்கு நெருங்கிய உறவுக்காரர் தான் அவரும் உள்ளூர்காரர் தான். நான் சாட்சியம் அளிப்பது வாதி செல்லத்துரை அழைத்து தான் என்று சொன்னால் அது சரிதான். எதிர்வாதியானவர் எந்த தொகையும் பெறவில்லை என்றும் தாவா புரோ நோட்டில் உள்ள கையொப்பம் இந்த எதிர்வாதியுடையது அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. நானும், வாதியும்சேர்ந்து பொய்யாக கையொப்பம் செய்து தாவா புரோ நோட்டை தயார் செய்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் சொல்லும் அந்த தேதியில் எதிர்வாதியானவர் காஞ்சிபுரத்தில் இருந்தார் என்று சொன்னால் அது சரியல்ல. செல்லத்துரை மணல் வியாபாரம், செங்கல் வியாபாரம் பார்த்து வந்தார். வட்டிக்கு அவர் பணம் கொடுத்து வாங்குவாரா என்று கேட்டால் தெரிந்தவருக்கு வட்டிக்கு பணம் கொடுத்து வாங்குவார். செல்லத்துரை கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய்யா சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09th day of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.